**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**
**பெரிய திருமொழி**
**பத்தாம் பத்து**

**ஒன்பதாம் திருமொழி - புள்ளுருவாகி**
**க்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபாடு 6**
**[தலைவியின் ஆற்றாமைக்குத் தாய் இரங்கித் தலைவனை வேண்டும் பாசுரம்]**

** புள் உருவாகி நள் இருள் வந்த *
பூதனை மாள * இலங்கை
ஒள் எரி மண்டி உண்ணப் பணித்த *
ஊக்கம் அதனை நினைந்தோ? **
கள் அவிழ் கோதை காதலும் * எங்கள்
காரிகை மாதர் கருத்தும் *
பிள்ளை தன் கையில் கிண்ணமே ஒக்கப் *
பேசுவது எந்தை பிரானே! 1

மன்றில் மலிந்து கூத்துவந்தாடி *
மால் விடை ஏழும் அடர்த்து * ஆயர்
அன்று நடுங்க ஆநிரை காத்த *
ஆண்மை கொலோ? அறியேன் நான் **
நின்ற பிரானே! நீள்கடல் வண்ணா! *
நீ இவள் தன்னை நின் கோயில் *
முன்றில் எழுந்த முருங்கையில் தேனா *
முன் கைவளை கவர்ந்தாயே 2

ஆர் மலி ஆழி சங்கொடு பற்றி *
ஆற்றலை ஆற்றல் மிகுத்துக் *
கார் முகில் வண்ணா! கஞ்சனை முன்னம் *
கடந்த நின் கடுந்திறல் தானோ? **
நேர் இழை மாதை நித்திலத் தொத்தை *
நெடுங்கடல் அமுது அனையாளை *
ஆர் எழில் வண்ணா! அங்கையில் வட்டாம் *
இவள் எனக் கருதுகின்றாயே 3

மல்கிய தோளும் மான் உரி அதளும் *
உடையவர் தமக்கும் ஓர் பாகம் *
நல்கிய நலமோ? நரகனைத் தொலைத்த *
கரதலத்து அமைதியின் கருத்தோ? **
அல்லி அங்கோதை அணி நிறம் கொண்டு
வந்து * முன்னே நின்று போகாய் *
சொல்லி என்? நம்பீ! இவளை நீ உங்கள் *
தொண்டர் கைத் தண்டு என்றவாறே 4

செரு அழியாத மன்னர்கள் மாளத் *
தேர் வலங்கொண்டு அவர் செல்லும் *
அரு வழி வானம் அதர்படக் கண்ட *
ஆண்மை கொலோ? அறியேன் நான் **
திருமொழி எங்கள் தேமலர்க் கோதை *
சீர்மையை நினைந்திலை அந்தோ! *
பெரு வழி நாவற்கனியினும் எளியள் *
இவள் எனப் பேசுகின்றாயே 5

அரக்கியர் ஆகம் புல்லென வில்லால் *
அணி மதிள் இலங்கையார் கோனை *
செருக்கழித்து அமரர் பணிய முன் நின்ற *
சேவகமோ? செய்தது இன்று **
முருக்கிதழ் வாய்ச்சி முன் கை வெண்சங்கம்
கொண்டு * முன்னே நின்று போகாய் *
எருக்கிலைக்காக எறி மழு ஓச்சல் *
என் செய்வது? எந்தை பிரானே! 6

ஆழி அந்திண்தேர் அரசர் வந்து இறைஞ்ச *
அலைகடல் உலகம் முன் ஆண்ட *
பாழி அந்தோள் ஓர் ஆயிரம் வீழப் *
படை மழுப் பற்றிய வலியோ? **
மாழை மென்னோக்கி மணி நிறம் கொண்டு
வந்து * முன்னே நின்று போகாய் *
கோழி வெண்முட்டைக்கு என் செய்வது? எந்தாய்! *
குறுந்தடி நெடுங்கடல் வண்ணா! 7

பொருந்தலன் ஆகம் புள் உவந்து ஏற *
வள் உகிரால் பிளந்து * அன்று
பெருந்தகைக்கு இரங்கி வாலியை முனிந்த *
பெருமை கொலோ? செய்தது இன்று **
பெருந்தடங்கண்ணி சுரும்புறு கோதை *
பெருமையை நினைந்திலை பேசில் *
கருங்கடல் வண்ணா! கவுள் கொண்ட நீராம் *
இவள் எனக் கருதுகின்றாயே 8

நீர் அழல் வானாய் நெடுநிலம் காலாய் *
நின்ற நின் நீர்மையை நினைந்தோ? *
சீர் கெழு கோதை என்னலது இலள் என்று *
அன்னதோர் தேற்றன்மை தானோ? **
பார் கெழு பவ்வத்து ஆரமுதனைய *
பாவையைப் பாவம் செய்தேனுக்கு *
ஆர் அழல் ஓம்பும் அந்தணன் தோட்டமாக *
நின் மனத்து வைத்தாயே 9

** வேட்டத்தைக் கருதாது அடி இணை வணங்கி *
மெய்ம்மை நின்று எம்பெருமானை *
வாள் திறல் தானை மங்கையர் தலைவன் *
மானவேல் கலியன் வாய் ஒலிகள் **
தோட்டலர் பைந்தார்ச் சுடர் முடியானைப் *
பழமொழியால் பணிந்து உரைத்த *
பாட்டிவை பாடப் பத்திமை பெருகிச் *
சித்தமும் திருவொடு மிகுமே 10

**அடிவரவு:** புள் மன்றில் ஆர் மல்கிய செரு அரக்கியர் ஆழி பொருந்தலன் நீர் வேட்டத்தை திருத்தாய்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---